(2023-24-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** 23 PTM 415

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2025

எம்.ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

நான்காம் பருவம் — நேரம் : 3 மணி நேரம்

தொல்காப்பியம் - பொருளதிகாரம் - 2

பகுதி – அ **(10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. பண்ணைத் தோன்றிய என்பதில் 'பண்ணை' என்பதன் பொருள் யாது?

அ. விளையாட்டு ஆ. நகை இ. வேளாண்மை ஈ. ஆடல்

2. ------------------ மேற்றே உள்ளுங் காலை

அ. விரவுதல் ஆ. உயர்ந்ததன் இ. கிழக்கிடுபொருள் ஈ. ஒத்தல்

3. நிரைநிரையுடன் நேரசை சேர்ந்தால் எவ்வாறு அழைக்கப்படும்?

அ. தேமாங்காய் ஆ. கூவிளங்காய் இ. கருவிளங்காய் ஈ. புளிமாங்காய்

4. வெளிப்படையாய் ஒருவரது குற்றங் குறைகளைச் சொல்வது எது?

அ. செம்பொருள் ஆ. பழிகரப்பு இ. எள்ளல் ஈ. போக்கியல்

5. எவற்றொடு கலந்த மயக்கம் உலகம் ஆகும்?

அ. நிலம் ஆ. தீ, நீர் இ. வளி, ஆகாயம் ஈ. அனைத்தும் சரி

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. நிரப்புக : புதுமை -------------- சிறுமை ஆக்கம் - மருட்கை ஆகும்.
7. பயனிலை உவமம் எத்தனை வகைப்படும்?
8. அளவடியும் சிந்தடியும் எப்பாவிற்குரியதாகும்?
9. பொருள் தருக.: 1. பிசி 2. கைகோள்
10. மரத்தின் உறுப்புப் பெயர்களைச் சுட்டுக.

**பகுதி – ஆ** (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விடையளிக்க.** (K3)

11. அ. மக்களின் மன உணர்வு வெளிப்பாடுகள் குறித்து மெய்ப்பாட்டியல் கூறுவனவற்றை எழுதுக. (அல்லது)

ஆ. களவுக்காலப் பிரிவு மெய்ப்பாடுகளை விளக்குக. (த.பி.பா.)

12. அ. உவம உருபுகள் எத்தனை வகைப்படும்? உரைக்கவும்.

(அல்லது)

ஆ. உவமை தோன்றுமிடங்களைக் கூறுக.

13. அ. அசை வகைகளைச் செய்யுளியல் எங்ஙனம் விளக்குகிறது?

(அல்லது)

ஆ. அடி அமைந்து வரும் இடங்களைத் தொல்காப்பியர் எவ்வகையில் இயம்புகின்றார்?

14. அ. அங்கதப் பாட்டின் இலக்கணத்தையும், வகைகளையும் எழுதுக.

(அல்லது)

ஆ. பாட்டிடை வைத்த குறிப்பினானும் எனத் தொடங்கும் நூற்பாவின் கருத்துகளை உரைக்கவும்.

15. அ. இளமைப்பெயர் பெறும் உயிரினங்களை எழுது.

(அல்லது)

ஆ. உயிரின வகை குறித்த தொல்காப்பியரின் சிந்தனைகளை உரைக்கவும்.

## பகுதி – இ (5 x 8 = 40)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.** (K4 & K5)

16. அ) எண்வகை மெய்ப்பாடுகள் தரும் சுவைகளை விரித்துணர்த்துக.

(அல்லது)

ஆ) இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் நிகழ்வனவற்றை ஆய்ந்தெழுதுக.

17. அ) உவமையைக் கூறுவோரைத் தொல்காப்பியர் எவ்வகையில் தெளிவுறுத்துகிறார்?

(அல்லது)

ஆ) நால்வகை உவமைகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்கவும்.

18. அ) செய்யுள் உறுப்புகளைத் தொல்காப்பியர் கட்டமைத்துள்ள பாங்கினை விவரிக்கவும்.

(அல்லது)

ஆ) பா வகைகள் குறித்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

19. அ) கூற்று நிகழ்த்துவோரையும், கேட்போரையும் ஆராய்க.

(அல்லது)

ஆ) வண்ணமும் அதன் வகைகளும் குறித்த செய்திகளைக் கட்டுரையாக்குக.

20. அ) மரபியலில் ஆண்பாற் பெயர்கள் அமையப்பெற்ற திறத்தை எடுத்தியம்புக.

(அல்லது)

ஆ) நூலின் இலக்கணத்தையும், நூல் வகைகளையும் திறனாய்க.



*********